**அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம் தலைமை நிர்வாகம்.**
Annai poopathi Tamilsk Kultursenter sentralstyre
Annai poopathi Tamil Cultural Centre Central committee

02.05.2025

வணக்கம்!

அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூட. உறுப்பினர்களுக்கான முக்கிய அறிவிப்பு !

**அண்மைய நாட்களில் எமது வளாக நிர்வாகத்தின் செயற்பாடுகள் தொடர்பான உண்மைக்குப் புறம்பான பரப்புரைகள் துரிதகதியில் மேற்கொள்ளப்பட்டு வருவதை துல்லியமாக அவதானிக்க முடிகிறது.**

**எமது வளாகங்களில் உண்மைக்கு மாறான கதைகளை, கபட நோக்கத்தோடு கட்டவிழ்த்து, சிலரை தமது மாயை வலைக்குள் சிக்கவைத்துள்ளனர். இச் செயற்பாடுகள், கலைக்கூடத்தைச் சிதைக்க வைக்கும் நோக்கத்தையே கொண்டுள்ளன என்பதனை திட்டவட்டமாகக் காட்டுகின்றது.**

**எனவே, எமது அங்கத்தவர்கள் உண்மை நிலையைப் புரிந்துகொள்ள வேண்டும் என்ற நோக்கோடு கீழ்க்காணும் விடயங்களை அனைவரினதும் கவனத்திற்கு கொண்டு வருகிறோம்.**

அன்பான அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூட உறுப்பினர்களே!

கடந்த சில வாரங்களாக சில குழப்பவாதிகளால் எமது சில வளாகங்களில் கல்வியியற் செயற்பாடுகள் பெரும் சவால்களை எதிர்நோக்கியது அறிந்ததே. குழந்தைகள் மற்றும் மாணவர்கள் கல்வி கற்கும் எமது நிறுவனத்தில் அமைதிபேணுதல் மிகவும் அவசியம் என்ற வகையில், எமது நிர்வாகம் மிகவும் பொறுமையுடனும், நிதானத்துடனும் நடந்து கொண்டது. இதனை, எமது நிறுவனத்தின் செயற்திறனற்ற தன்மையாகக் கருதிய குழப்பவாதிகள், தமது நாகரீமற்ற, அறம்தவறிய போராட்டத்தை திட்டமிட்டு செயற்படுத்திக் கொண்டுள்ளனர்.

நிறுவனத்தைக் கையகப்படுத்தல் அல்லது வளாங்களைத் துண்டாடும் நோக்கோடு செயற்படும் இவர்கள், சில அங்கத்தவர்களையும் சில ஆசிரியர்களையும் தமது குழுவில் இணைத்து உள்ளனர்.

அன்னை பூபதித் தாயின் பெயரால் உருவாக்கப்பட்ட கலைக்கூடத்தின் நற்பெயருக்குக் களங்கம் ஏற்படுத்தும் நோக்கோடு, திட்டமிட்டு நடாத்தப்படும் முறையற்ற செயற்பாடுகளை எதிர்கொண்டு, நிறுவன யாப்பையும் கூட்டு நிறுவனப் பண்பையும் நிலைநிறுத்த, நிறுவனத்தால் நோர்வே நாட்டு சட்டவிதிகளுக்கும், யாப்பின் பிரிவுகளுக்கும் அமைவாக சில திடமான, வலுவான நடவடிக்கைகளை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதேவேளை, அன்னை பூபதி நிறுவனம் எதிர்கொண்டுள்ள சவால்களின் தாற்பரியத்தையும், உண்மைத்தன்மையும் புரிந்துகொண்டு, எமது நிறுவனத்துடன் கரங்கோர்த்து நிற்கும் உறுப்பினர்களையும் ஆசிரியர்களையும் நாம் வாழ்த்தி நிற்கிறோம்.

அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடத்தின் யாப்புவிதிகளையும் நடைமுறைவிதிகளையும் நோர்வே நாட்டு சட்டவிதிமுறைகளையும் மீறிச் செயற்பட்டு வந்த எமது உறுப்பினர்களின் பெற்றோருடன் தனிப்பட்ட ரீதியில் ஒரு கலந்துரையாடலுக்கு வழங்கப்பட்ட அழைப்புகள் யாவும் புறக்கணிக்கப்பட்ட நிலையிலேயே, 'குற்றச் செயல்களில் ஈடுபட்ட பெற்றோருக்கு எதிராக அன்னை நிறுவனம் நடவடிக்கை எடுக்க நிர்பந்திக்கப்பட்டது' என்பதை அனைவரும் அறிவீர்கள்.

'வைத்வெத் வளாகத்தில்' அன்னையின் ஒப்புதல் (யாப்புவிதிகளின் படி) இன்றித் திட்டமிட்டு Brønnøysundregistrene என்ற பதிவகத்தில பதிவுகளைத் தன்னிச்சையாக மேற்கொண்டுள்ளனர்.
ஒருபுறம் சட்டவல்லுனரை வைத்து தமது நிலைப்பாட்டை பதிவுசெய்துள்ளதோடு,மறுபுறம் அன்னையுடன் தாம் இணைந்து செயற்பட்டு வருவதாக எமது உறுப்பினர்களையும் ஆசிரியர்களையும் ஏமாற்றி வருகின்றனர்.

'திறம்மன் வளாகத்தில்' அன்னை பூபதி நிறுவனத்தின் மீது பொய்ப் பிரச்சாரங்களைப் பரப்பிவரும் சில அமைப்புகளுடனும் நபர்களுடனும் இணைந்து, எமது உறுப்பினர்களையும் தவறான வழியில் இட்டுச்

சென்ற திறம்மன் வளாக நிர்வாகத்தில் முக்கிய பொறுப்பிலிருந்த நபர், நிர்வாகப் பொறுப்பிலிருந்து விலகி, பின்பு மீண்டும் தன்னிச்சையாக இயங்கி, யாப்புவிதிமுறைகளை மீறி, திறம்மன் வளாகம் அன்னையிலிருந்து ஓய்வெடுப்பதாகக் கூறியுள்ளார்கள்.

'றொம்மன் வளாகத்தில்' 600ற்கும் மேற்பட்ட குடும்பங்களின் மின்னஞ்சல் மற்றும் தொலைபேசி இலக்கங்களை அனுமதியின்றி தவறான வழியில் எடுக்கப்பட்டதும், பொய்யான தகவல்களைப் பரப்பும் கபட நோக்கோடு மின்னஞ்சல்கள், குறுந்தகவல்கள் என்பன அனுப்பி வைக்கப்பட்டன. இவை எமது வளாக உறுப்பினர்களை குழப்பத்திற்கு ஆளாக்கும் என்பதை நன்கறிந்து, திட்டமிட்டு அனுப்பி வைக்கப்பட்டதும் பலதடவை சுட்டிக்காட்டப்பட்டது.

மேற்படி மோசடிச் செயலில் ஈடுபட்டோர் மீதே, அன்னைத் தலைமை நிர்வாகத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டது. தமது மோசடிச் செயலை மூடிமறைக்கும் தந்திரமான நோக்குடனே பல பொய்யான பரப்புரைகள் இன்றுவரை அரங்கேறி வருதையும் குறிப்பிட விரும்புகிறோம்.

இவ்வாறான புறச்சூழலில் எமது நிறுவனத்தின் மீது வீண்பழிசுமத்தி, தம்மை தூய்மையானவர்களாகக் காட்ட எத்தனிக்கும் இக்குழப்பவாதிகளின் அறமற்ற செயலுக்கு துணை போகும் சிலரை எண்ணி நாம் மிகுந்த கவலையடைகிறோம்.

எது எவ்வாறு இருப்பினும் அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம் தொடர்ந்தும் மொழிப்பணியை இடையூறு இன்றித் தொடர ஆவன செய்யும் என உறுதியளிக்கிறோம்.

மாணவர்களின் தமிழ்மொழிக் கல்விக்கு பாதிப்பு ஏற்படாவகையில், மாணவர்கள் தொடர்ந்தும் எமது வளாகங்களில் கல்வியற் செயற்பாட்டைத் தொடர முடியும் என பல தடவைகள் அறியத்தரப்பட்டதையும் இங்கு சுட்டி நிற்கிறோம்.

அந்த வகையில் அன்னை பூபதி வைத்வெத், றொம்மன் மற்றும் திறம்மன் வளாகங்களில் குழப்பநிலையிலும், தடுமாற்றத்திலும், ஏமாற்றப்பட்டும் வெளியேறியுள்ள அல்லது அன்னையுடன் இணைந்து செயற்படாமல் இருக்கும் பாடசாலை மாணவர்களுக்கான தேர்வுகள்,

விளையாட்டுப் போட்டிகள் மற்றும் நிகழ்வுகள் என்பனவற்றில் பங்கேற்கும் சந்தர்ப்பத்தை நாம் உருவாக்கித்தரத் தயாராக உள்ளோம். எனவே மேற்குறிப்பிட்ட வளாக மாணவர்களின் பெற்றோர் எம்மோடு நேரடியாக விரைவாகத் தொடர்பினை மேற்கொள்ளுமாறு உரிமையோடு கேட்டுக்கொள்கின்றோம்.

தேர்வுகள் விவரம்:
புலன்மொழித்தேர்வு மற்றும் எழுத்துத் தேர்வு:

1. அனைத்துலகத் தேர்வுகள்
2. அன்னை ஆண்டிறுதிப் பொதுத் தேர்வுகள்

மற்றும்

விளையாட்டுப்போட்டிகளை வேறு வளாகங்களுடன் இணைந்து நடத்துவதற்கான ஒழுங்குகளை ஏற்பாடுகளைச் செய்துதர அன்னை தலைமை நிர்வாகம் தயாராக உள்ளது.

தங்கள் பிள்ளைகளில் நலன்கருதி விரைந்து எம்மோடு தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். தேர்வுகள் மற்றும் விளையாட்டுப்போட்டிகள் சார்ந்த மேற்கூறப்பட்ட தகவல், நடவடிக்கை எடுக்கப்பட்ட பெற்றோரின் பிள்ளைகளுக்கும் பொருந்தும் என்பதனையும் குறிப்பிட விரும்புகின்றோம்.

எமது நிறுவனதின் பெயரைப் பாவித்து சில விஷமிகள் செய்யும் அவதூறுப் பிரச்சாரங்களுக்கு செவிமடுக்க வேண்டாம் என வினயமாக கேட்டுக்கொள்கிறோம். எந்த சவால்களையும் எதிர்கொண்டு பெற்றோர் உங்களுடன் இணைந்து அமைதியான வழியில் நோர்வே நாட்டுச் சட்டவிதிகளுக்கும், யாப்பு விதிகளுக்கும் அமைவாக எமது நிர்வாகம் செயற்படும் என்பதை திடமாகக் கூறி நிற்கிறோம்.

தொடர்பிற்கு: annai@annai.no

"தமிழ் எங்கள் அடையாளம்"

இவ்வண்ணம்
தலைமை நிர்வாகம்
அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம்.